**புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2017**

---

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்றிட்டமானது கட்டுதல், இயக்குதல் மற்றும் பரிமாற்றல் அடிப்படையின் கீழ் அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**1.1 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. 02 கட்டங்களின் கீழான புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான 17.3 கிலோ மீற்றரில் உயர்த்திய நெடுஞ்சாலை ஒன்றினை நிர்மானிப்பதனூடாக பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்தலினூடாக போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல், முதலீடு மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் வறுமை மற்றும் வேலையின்மையினை குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான நெடுஞ்சாலையின் கட்டம் - 01 இன் 6.90 கிலோ மீற்றரினை நிர்மானிப்பதற்காக ரூபா 55 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட கிரயமாக தீர்மானிக்கப்பட்டது. நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் 2021 நெவம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

செயற்றிட்டத்தின் செயற்றிட்ட கண்காணிப்பு பிரிவும்துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்றிட்டம் என அழைக்கப்படும் மற்றொரு செயற்றிட்டமும் ஒரே வளானத்திலேயே அமைந்துள்ளதுஇ மீளாய்வாண்டின் மே தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ஏற்பட்ட ரூபா 7.81 மில்லியன் தொகையான மேந்தளைக் கிரயம் மற்றய செயற்றிட்டத்திற்கு விதித்தொதுக்குவதற்கு பதிலாக இச் செயற்றிட்டத்தின் செலவாக சாட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

பெறப்பட்ட தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 186.80 மில்லியன் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொத்தமாக ரூபா 26.78 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயல்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் கட்டம் - I இற்கான பட்டியல்படுத்தப்பட்ட சாத்தியவள ஆய்வு மற்றும் பூர்வாங்க வடிவமைப்புக்களுக்கான செயற்பாடுகள் தெற்கு அதிவேக நீடிப்பு செயற்றிட்டம் என்றழைக்கப்படும் வேறு செயற்றிட்டத்தின் கீழ் ஏற்கெனவே 2015 திசெம்பர் 31 இலேயே முடிவுருத்தப்பட்டிருந்தது. நெடுஞ்சாலையின் சமூக மற்றும் சூழல் விளைவு மதிப்பீட்டு திட்டம் மற்றும் மீட்சி திட்டம் என்பன முறையே ரூபா 3.94 மில்லியன் மற்றும் ரூபா 3.71 மில்லியன் செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், அதன் மீதான அறிக்கை 2018 மே 31 இல் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருந்த 17 பதவிகளில், பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், தலைமை பொறியியலாளர், செயற்றிட்ட பொறியியலாளர், கனிய அளவயாளர், காணி கொள்வனவு மற்றும் மீள் குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் உள்ளடங்களாக 12 முக்கிய பதவிகள் 2017 திசெம்பர் 31 வரை காலியாக காணப்பட்டது. மேலும், ஏனைய முக்கிய பதவிகளான செயற்றிட்ட கணக்காளர் மற்றும் கொள்முதல் நிபுனர் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருந்த பதவிப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் நடவடிக்கைகள்

செயற்றிட்டமானது காணி கொள்வனவின் மீதான ஆரம்ப அளவை வேலைகளை மீளாய்வாண்டின் போது முடிவுறுத்தியிருந்ததுடன் செயற்றிட்டத்தின் கட்டம் - I இன் கீழ் 1,106 வீடுகள் உள்ளடங்களாக 786 காணித் துண்டுகள் கொள்வனவு மற்றும் மீள் குடியேற்ற நோக்கத்திற்காக அடயாளப்படுத்தி இருந்தது. இருப்பினும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி கிடைப்பதில் கானப்பட்ட கால தாமதம் காரணமாக செயற்றிட்டத்தின் காணி கொள்வனவு நடவடிக்கைகள் தாமதமாக காணப்பட்டது.

.